விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 346 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 14 வியாழக்கிழமை (30.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அமைச்சர் ஹரீன் இன்று யாழ்.விஜயம்

(கொழும்பு)

சுற்றுலா, விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்ணாண்டோ இன்றுயாழ்ப் பாணத்திற்கு விஜ 15

## காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ள நிலையில்

### கே.கே.எஸ் துறைமுக கட்டுமானத்தை பார்வையிட்ட இந்தியத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் பயணிகள் கப்பல் சேவை ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் காங்கேசன்துறை துறைமுகக் கட்டுமானத்தை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று பார்வையிட்டார். 15

## ஐக்கிய அரபுக்கு ஜனாதிபதி பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் கால நிலை மாற்ற மாநாடு (Cop 28) ஐக்கிய அரபு இராச்சியத்தில் இன்று ஆரம்பமாகிறது.

இந்த நிலையில், குறித்த மாநாட்டில் கலந்து கொள்ள ஜனாதிபதி 15

## தமிழர்கள் அதிகாரம் பெற

# இந்தியா அதியுச்சமாக தலையிட வேண்டும்

### டில்லியில் கூட்டாக வலியுறுத்து




(புதுடில்லி) தமிழ் மக்கள் அதிகாரம் பெற இந்தியா அதியுச்சமாக தலையிட வேண்டும் என டில்லியில் கூட்டாக வலியுறுத்தப்பட்டுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு



(பளை)

பளையில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி பளை பொலிஸ் 15

## உரும்பிராய் காளி கோவிலில் ஐம்பொன்னினாலான அம்மன் சிலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் காளி கோவிலில் ஐம்பொன்னினாலான அம்மன் சிலை ஒன்று திருடப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் காளி கோவிலில் நேற்று முன்தினம் இரவு இத்திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. 15

## மாவீரர் தின நிகழ்வில் போராளிகளின் ஆடைகள்

### கோப்பாய் பொலிஸார் 6 பேரிடம் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தின நிகழ்வில் விடுதலைப் புலிகளின் போராளிகளின் ஆடைகளை ஒத்த ஆடைகளை சில சிறுவர்கள் அணிந்து வந்தனர் எனும் குற்றச்சாட்டில், கோப்பாய் பொலிஸார் ஆறு பேரிடம் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத் 15

## அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கரையோரப் பகுதிகளை

### வனவளத் திணைக்களம் கையகப்படுத்த திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவை மையமாக கொண்டு அராலி முதல் பொன்னாலை வரையான கரையோரப் பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வனப்பிரதேசமாக ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளரால் சங்கானை பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்தார். 15

## பருத்தித்துறையில் விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## புதையல் தோண்டிய ஐவர் முல்லையில் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் புதையல் தோண்ட முற்பட்ட ஐந்து பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.


இந்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றுள்ளது.

நாச்சிகுடா பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் புதையல் தோண்டுவதற்கான ஆரம்பகட்ட பணிகளை மேற்கொண்டிருந்த வேளை சந்தேகநபர்களை கைது செய்துள்ளதுடன் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

விசுவமடு, நெத்தி 15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகியுள்ளோம்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

அடுத்த வருடம் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்து 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயம்**

**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2023**





**அஜந்தன் யபிசா** 153 புள்ளி | **முகுந்தன் தக்ஷயா** 149 புள்ளி | **சதீஸ் சஜீபன்** 148 புள்ளி

பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக மூன்று மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர். இவர்களோடு 70 புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவ் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

**கிளி/ முக்கொம்பன் மகா வித்தியாலயம்**

(C-7757)

# கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி **விஜயகுமாரி முகுந்தன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர்**

**திருமதி இராசரத்தினம் செல்வராணி**



அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**வட மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்**

பிறப்பு 1948.08.02 இறப்பு 2023.11.28

(18047)

**நல்லை மங்கையர்க்கரசியின்**

# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்




**செல்வி தர்ஷிலா பொன்னுத்துரை**

Dip in music, Dip in Edu, MA, SLTS-I

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி இருபத்தைந்து வருட சேவையை அகவை அறுபதில் நிறைவு செய்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது சிரேஷ்ட ஆசிரியை அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் மகிழ்வோடு எல்லா நலன்களும் பெற்று இறையருளோடு நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

**யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

(18040)


# மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7753)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**

**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 5392, 076 315 6470**



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127


# எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 24 - 02 - 1952 மறைவு 29 - 11 - 2015

**திருமதி தர்மலக்ஷ்மி சூரியகுமார்**

**திதி : சங்கடகர சதுர்த்தி**

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமை போதித்து பக்குவமாய் பாரினிலே
வாழ வழி நடத்தினீர்கள் – அம்மா
ஆதரவற்றோர்க்கு உதவிட வேண்டுமென
அற வழி காட்டினீர்கள் – அம்மா
நீங்கள் எம் கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் நினைவுகளில் என்றும் நிலையாய்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் – அம்மா

**72, அச்சுக்கூட வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**உங்கள் நினைவுகளுடன்:- ந.சூரியகுமார் (கணவர்), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(18033)

# 31ம் நாள் நினைவுகளுடன்...



தோற்றம் 15 - 11 - 1950 மறைவு 30 - 10 - 2023

**அமரர் பாலசிங்கம் வெற்றிவேல்**

**(ஓய்வுநிலை அதிபர் - யா/கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை)**

நாட்கள் முப்பது நகர்ந்தாலும்
நாங்கள் இன்னும் ஆறவில்லை
ஊர் போற்றும் நல்லவராக
பார் போற்றும் வல்லவராக
வாழ்வாங்கு வாழ்ந்து எங்களை
வாழவைத்த தெய்வமே – உங்கள்
பண்பும், ஒழுக்கமும், மதிப்பும்
எங்களுக்கு என்றும் வழிகாட்டிடுமே.

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (30.11.2023) வியாழக் கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 02.12.2023 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் கொற்றாவத்தை செட்டித்தறை சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள நினைவஞ்சலி, நினைவு மலர் வெளியிடு ஆகிய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**“ரதி மஹால்”**

**இங்ஙனம் குடும்பத்தினர்**

(C-7758)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களிடையே மீண்டும் அதிகரிக்கும் எச்.ஐ.வி தொற்று

## வைத்திய நிபுணர் திலானி ரத்நாயக்க

(கொழும்பு)

**இளைஞர் சமூகம் மீண்டும் எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளாவதில் அதிகரிப்பதைக் காணக்கூடிய நிலை உள்ளதாக பால்வினை நோய்கள் தொடர்பான நிபுணரான வைத்தியர் திலானி ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.**

டிசெம்பர் 1ஆம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கொழும்பு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

2018 முதல், 15 முதல் 24 வயது வரையிலான இளைஞர் சமூகத்தில் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது.

2022 இல் புதிய எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 73 பேர் இளைஞர்கள்.

அதாவது 12 சதவீதம். அவர்களில் 66 பேர் ஆண்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார் (நி-5-6)

# மகிந்த பயணித்த வாகனம் விபத்து பொலிஸ் தீவிர விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் குருநாகல் - யக்கஹாபிட்டிய வெளியேறும் வீதியினை கடந்து செல்லும் போது பாதுகாப்பு முனையத்தில் உள்ள தடுப்பு படலை வாகனம் மீது விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அநுராதபுரம் நோக்கி நேற்று முன்தினம் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஏற்றிச் சென்ற வாகனம் வெளியேறும் வாயிலைக் கடந்தவுடன் மகிந்த ராஜபக்ஷவின் வாகனம் செல்லும் போது தடுப்பு படலையை ஊழியர் இறக்கிய சந்தர்ப்பத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ்விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய ஊழியரை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், நெடுஞ்சாலைகளில் உள்ள பாதுகாப்பு தடவைகளில் பணியாற்றும் சில ஊழியர்களின் கவனக்குறைவால் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதாக பொலிஸார் கூறியுள்ளனர். (நி-5-6)

# வட-கிழக்கில் 3 வருடங்களில் மீள்குடியேற்றம் நிறைவடையும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அனைவரையும் அடுத்த 3 வருடங்களுக்குள் மீள்குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரை யாற்றிய அவர் 2027 ஆம் ஆண்டுக்குள் கண்ணிவெடிகள் அற்ற நாடாக இலங்கையை மாற்ற விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்ய பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அப்பகுதி மக்களை எந்தவகையிலும் பாதிக்காத வகையில் இந்த செயற்பாடுகளை நாம் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தோம்.

தற்போதும் யுத்தம் காரணமாக அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களை சொந்து பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக 1 இலட்சத்து 47 ஆயிரத்து 848 வீடுகளை அரசாங்கம் பல்வேறு தரப்பினரின் உதவியுடனும் நிர்மானிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் 1700 வீட்டுத் தொகுதிகளில் நிர்மானப்பணிகள் பூரணமாகியிருக்கவில்லை .

இவ்வருட ஆரம்பத்தில் நாம் மேலும் 1665 வீடுகளை நிர்மாணிக்க நாம் நடவடிக்கை எடுத்தோம். 150 மில்லியன் ரூபாய் நிதி இதற்காக ஒதுக்கப்பட்டது. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 500 மில்லியன் ரூபாயும் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது.

3 வருடங்களுக்குள் வடக்கு- கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த அனைவரையும் குடியமர்த்த முடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

2024 ஆம் ஆண்டிலிருந்து 2027 ஆம் ஆண்டுக்குள், கண்ணி வெடிகள் அற்ற நாடாக இதனை மாற்ற நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# போலிக் அமிலம் மருந்திற்கு இதுவரை தட்டுப்பாடில்லை

## அரச குடும்பநல சுகாதார சேவையாளர் சங்கம்

(கொழும்பு)

கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் போலிக் அமிலம் என்ற மருந்துக்கு இதுவரை யில் தட்டுப்பாடு பதிவாகவில்லை என அரச குடும்பநல சுகாதார சேவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பல மாவட்டங்களில் ஆராயப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவி தேவிக்கா கொடி துவக்கு தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் போலிக் அமிலம் உள்ளிட்ட விற்றமின் வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கடந்த தினங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், சகல மருந்தகங்களிலும் போதிய அளவு போலிக் அமிலம் என்ற மருந்து கையிருப்பில் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரச குடும்பநல சுகாதார சேவையாளர்கள் சங்கத்தின் தலைவி தேவிக்கா கொழுதுவக்கு மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன்

(கொழும்பு)




பதில் பொலிஸ் மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் குறித்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

சி.டி விக்ரமரத்னவிற்கு மூன்று மாதங்களுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு காலம் முடிவடைந்த பின்னர், ஜூலை 9 முதல் மேலுக்கு வரும் வகையில் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்க ப்பட்டது.

மூன்றாவது முறையாக மேலும் 3 வார சேவை நீட்டிப்பு ஒக்டோபர் 13 அன்று வழங்கப்பட்ட நிலையில் நான்காவது முறையாக நவம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை மீண்டும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 3.5 கிலோ தங்கம் இந்தியாவில் மீட்பு



(சென்னை)

இலங்கையில் இருந்து கடத்தி செல்லப்பட்ட 2.15 கோடி மதிப்பிலான 3.5 கிலோ தங்கத்தை இந்திய சுங்கத்துறை கைப்பற்றியுள்ளது.

பாம்பன் முந்தல் முனை பகுதியில் நேற்று அதிகாலை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது படகொன்றில் குறித்த கடத்தல் தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து நாட்டுப்படகில் தமிழகத்திற்கு தங்க கட்டிகள் கடத்தி வரப்படுவதாக திருச்சி சுங்கத்துறை அதிகாரிக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதை அடுத்து பாம்பன் கடற்பகுதியில் சுங்கத்துறை அதிகாரிகள் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த போது இலங்கையிலிருந்து சந்தேகத்துக்கு இடமாக ஒரு நாட்டு படகு அங்கே மாக வந்துள்ளது.

அதனை மடக்கி பிடிக்க முற்பட்ட போது, படகில் இருந்தவர்கள் சுங்கத்துறை அதிகாரிகளை கண்டதும் படகை விட்டுவிட்டு தப்பி ஓடி விட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் படகில் இருந்த 3.5 கிலோ தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து ராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்துக்கு கொண்டு சென்று தீவிரமாக விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் தங்கத்தை இலங்கையில் இருந்து யார் கொண்டு வந்தார்கள் என்ற தப்பி ஓடியவர்கள் யார் என்ற பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர்.

மேலும் கடத்தி வரப்பட்ட தங்கத்தின் சர்வதேச மதிப்பு 2.25 கோடி இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டிற்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர ரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கமுடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.onlineexams.gov.lk என்ற இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா...

புதுடில்லியில் சில இந்து அமைப்புக் கள் புலம்பெயர் தரப்பினர், வடக்கு, கிழக்கு அரசியல் பிரதிநிதிகள், புலம் பெயர் சிவில் அமைப்பினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் பின்னர் டில்லியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கான அதிகாரங்களும் நிர்வாக கட்டமைப்பும் இல்லாத நிலை யில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவ தற்கு இந்தியா அதியுச்சமான தலை யீட்டைச் செய்ய வேண்டும்.

அத்துடன் தமிழர்களுக்கான அர்த்த முள்ள நிரந்தர தீர்வினை வழங்குவ தற்கான சர்வஜன வாக்கெடுப்பைச் செய் யவதற்கு இந்தியா வகிபாகமளிக்க வேண்டும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாதுள்ளமையால் தற்காலிக ஏற்பாடாக இடைக்கால நிர்வாக சபையை ஸ்தாபிப்பதற்கு நட வடிக்கை களை முன்னெடுக்க வேண்டு மெனவும் அவர்கள் வலியுறுத்தினார் கள்.

இச் சந்திப்பில்,

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸின் தலைவர் கிருஸ்ணபிள்ளை இளங்கோ, அமெரிக்க தமிழர் ஐக்கிய அரசியல் செயல்குழுவின் செயலாளர் தமோதரம் பிள்ளை சிவராஜ், ஐக்கிய அமெரிக் காவின் தமிழ் செயற்குழுவின் செயலாளர் சுந்தர் குப்புசுவாமி, உலக சமூக சேவை மையத்தின் அறங்கா வலர் ஆர்.சி.கதிரவன்ரூபவ், தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலா ளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வ ரன், இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞான முத்து சிறிநேசன் எம்.கே.சிவாஜி லிங்கம் மற்றும் சிவில் அமைப்புக் களின் பிரதிநிதிகளான துரைசாமி தவசிலிங்கம் , வேலன் சுவமிகள் ஆகி யோரும் பங்கேற்றிருந்தனர். (ம-7)


## பாராட்டி வாழ்த்துகிறோம்




2023 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்
186 புள்ளிகளைப் பெற்று மீசாலை வீரசிங்கம்
ஆரம்ப பாடசாலையில் முதலிடமும்,
தென்மராட்சி வலயத்தில் முதலிடமும் பெற்ற
**திரு.திருமதி மகிந்தன் ஹேரஜனா** அவர்களது
மகனாகிய
**செல்வன் மகிந்தன் வர்ஷான்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்
பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம்
பேரும் புகழுடனும் வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :
அம்மா, அப்பா, தம்பி, தங்கை,
அம்மம்மா, ஆசை மாமா, குட்டி மாமா

(18050)



## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 31 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18049)

**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**



## மரண அறிவித்தல்

### கந்தையா சிவராஜா



அல்வாய் கிழக்கு, வெள்ளிருவை யைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா சிவராஜா அவர்கள் இறுதிக் காலத்தில் மந்திகை கண்ணகியம்மன் ஆலய சூழலில் வசித்து வந்த நிலையில் 28.11.2023 அன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காலமானார் என்பதை அறியத் தருகின்றோம்.


தகவல்:
ஊர்மக்கள்

(C-7764)



## மரண அறிவித்தல்

பிறப்பு 1963 . 09 . 02



இறப்பு 2023 . 11 . 29

### பன்னிருகரம் அன்பழகன்
(கௌரி மரக்காலை உரிமையாளர்)

கொற்றாவத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பன்னிருகரம் அன்பழகன் அவர்கள் 29.11.2023 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 30.11.2023 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக எள்ளங் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சாந்தி பவனம்"
கொற்றாவத்தை,
கரவெட்டி.

(C-7765)

தகவல் -
குடும்பத்தினர்
077 636 3681



## மரண அறிவித்தல்

### திருமதி இராசரத்தினம் செல்வராணி



மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும் அம் பாள் வீதி, நாயன்மார்கட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் செல்வராணி அவர்கள் கடந்த 28.11.2023 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித் தம்பி - கதிராசி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நிற்சிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசரத்தினத் தின் அன்புத் துணைவியாரும் இராச காந்தன் (பிரான்ஸ்), செல்வகுமாரி (ஜேர்மனி), இராசகுமார் (பிரான்ஸ்), செல்வநாயகி (அமெரிக்கா), விஜய குமாரி (சமூக சேவை உத்தி யோகத்தர் - பிரதேச செயலகம், சாவகச்சேரி), இராசரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜிதா (பிரான்ஸ்), சிவநாதன் (ஜேர்மனி), கவிதா (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (அமெரிக்கா), முகுந்தன் (விரிவுரையாளர் - ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், வேலணை), அனித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், சுப்பிரமணியம், புஸ்பராணி மற்றும் தெய்வராணி, புஸ்பதேவன் (இளைப்பாறிய தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர் - MSO), சின்னத்தங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவசம்பு, ஜெயலட்சுமி, அருந்தவ நாதன், சின்னத்தம்பி மற்றும் சிவனேஸ்வரி, செல்லத்துரை, வேலுப்பிள்ளை, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரஜீவன், வினோஜன், வைஷ்ணவி, விபூசன், விதுர்சன், அனுசா, ருக்ஷினி, லக்ஷினி, ஆகாஷ், லோஜன், டிலக்ஷன், காயத்திரி, திவ்யன், பிரவினா, கர்ணி, ஜனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

83, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(18051)

தகவல் :-
குடும்பத்தினர்
077 655 2012, 077 624 2458


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான பொருளாதார மறுசீரமைப்புக்கள் அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார ஸ்திர நிலையை ஏற்படுத்த கடுமையான பொருளாதார மறுசீரமைப்புக்கள் அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் ஆரம்பமான 2023 இலங்கை பொருளாதார மாநாட்டின் ஆரம்ப உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில மாதங்களில், எமது நாட்டிலுள்ள அனைத்து கடன் வழங்குநர்களுடனும் முழுமையான நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம்.

இலங்கையின் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லெண்ணம் காரணமாகவே இந்தச் செயற்பாட்டில் வெற்றி பெற முடிந்தது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்புக்கு கொள்கையளவில் உடன்பாடு வழங்கிய முதலாவது வங்கி சீனா எக்ஸிம் வங்கியாகும்.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு மிக விரைவில் கொள்கையளவில் இதே போன்ற உடன்பாட்டை வழங்கும் என்று நம்புகிறோம்.

மேலும், எதிர்வரும் டிசெம்பரில் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் முதல் மீளாய்வை சர்வதேச நாணய நிதியம் நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டி நிறைந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும். பொருளாதார நெருக்கடியின் போது மேடைகளில் இருந்து தீர்வுகளைப் பற்றி பேசிய அரசியல் தலைவர்கள் இந்த திட்டத்தை அங்கீகரிக்கவில்லை.

ஆனால் அவர்கள் இதுவரை எந்த தீர்வையும் முன்வைக்கவில்லை. ஒரு நாடாக, நாம் என்றென்றும் வங்குரோத்து நிலையில் இருக்க முடியாது.

எனவே, நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்கும் வகையில் தற்போது செயற்பட்டு வருகிறோம்.

நாங்கள் போட்டித்தன்மையுடன் செயற்பட விரும்பாததால் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாங்கள் தயாராக இல்லை.


ஆனால் இப்படியே தொடர்ந்து செல்ல முடியாது. இதுவே எங்களுக்குக் கிடைத்துள்ள கடைசி வாய்ப்பாகும்.

எங்களிடம் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் உள்ளன. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமானால், இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பிற்குள் நாம் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)


## மணிவிழா வாழ்த்து

யா/வரணி மத்திய கல்லூரியில் 20 வருடங்களாக பாடசாலைப் பணியாளராகப் (விசேடதரம்) பணியாற்றி 11.11.2023 அன்று ஓய்வு பெற்றுள்ள

திரு. கிட்டிணன் யோகராசா அவர்கள்



சேவைக்காலம்:

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
01.03.1985-02.11.1997

யா/மட்டுவில் மகா வித்தியாலயம்
03.11.1997-14.04.2002

ஆசிரியர் மத்திய நிலையம் வரணி
15.04.2002-11.11.2002

யா/ வரணி மத்திய கல்லூரி
12.11.2002-10.11.2023

வரணி இயற்றாலை பெற்றெடுத்த வரமாகி,
தரணி போற்றும் மாண்புமிகு பண்பில் மிக்காய்,
இருபது ஆண்டுகளாய் பணிகள் செய்து,
ஓய்வு பெறும் யோகராசா அண்ணனே!
மாசில்லா மனத்தோனே! கடமையின் கண்ணியமே!
மனம் சலியா நெஞ்சமிகு உத்தமனே!
நீடு புகழ் பெற்று நிறைவோடு வாழ்க!

பாடசாலைச் சமூகம்,
யா/வரணி மத்திய கல்லூரி ,வரணி.

(C-7754)



## அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரி

இப்போது...

இல. 191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் இயங்குகிறது.

(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)

மேலதிக தொடர்புகளுக்கு

076 097 3121
021 222 3378


# இராசிபலன்

30.11.2023
கார்த்திகை 14, வியாழக்கிழமை
திருதியை பிற்பகல் 3.29 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 4.31 மணிவரை

சுபநேரம் -7.44-9.14 மணிவரை
இராகுகாலம்-1.44-3.14 மணிவரை
சாங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்-
அனுசம், கேட்டை.

வளவன்

**மேஷம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**சிம்மம்** அந்நிய தேசத்தொடர்புகள் அனுகூலம் தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், வருமானம் பெருக வழியமைப்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், உற்சாகமான நாள்.

**துலாம்** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் வெற்றி பெற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும், உடல் நலனில் அதிக கவனம் தேவை.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மீனம்** பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

நம்பிக்கை வெற்றியோடு வரு[illegible] நம்பிக்கை உடையாரிடமே வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 மருத்துவமனைகள் நாடளாவிய ரீதியில் மூடப்பட்டுள்ளது

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த 10 மாதங்களில் மாத்திரம் ஆயிரத்திற்கும் அதிகமான மருத்துவர்கள் நாட்டை விட்டு சென்றுள்ளதனால், நாடளாவிய ரீதியில் 40 மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்வேறு. பிரச்சினைகளால் 100 மருத்துவமனைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.இதற்கமைய, குறித்த மருத்துவமனைகளுக்கு அவசியமான மருத்துவ உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்து, சிகிச்சை செயற்பாடுகளை வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தலைமையில் விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சுழிபுரம் மேற்கு பிரதேச சபையின் பட்ஜெட் மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

2024ஆம் நிதியாண்டிற்கான வலிகாமம் சுழிபுரம் மேற்கு பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக காரைநகர் வீதி, சுழிபுரத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும் சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்கள் மற்றும் பொதுநூலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் இன்றிலிருந்து எதிர்வரும் 13.12.2023 ஆம் திகதிவரையும் அலுவலக முகநூல் பக்கத்திலும் மக்களது பார்வைக்காகவும் அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசனைகளுக்காகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என வலிகாமம் சுழிபுரம் மேற்கு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

## University of Jaffna
## Rural health development project: Bridging the gaps in Primary care through Community Health Workers in Kilinochchi District
## Temporary Appointments

The University of Jaffna will entertain applications from qualified persons for the under-mentioned posts.

**01. Post of Project Coordinator (Female)**
**Vacant – 03 post**

**Requirements:**
- Preference will be given to those who have experience in community-based health-related project coordination.

**Remuneration:** A monthly salary of LKR 32,608.00 will be paid.

**02.Post of Community Health Worker (Female)**
**Vacant – 12 posts**

**Requirements:**
- Preference will be given to those who have experience in community-based health-related projects.
- The candidate should be residing in Kilinochchi District.

**Remuneration:** A monthly salary of LKR 32,608.00 will be paid.

**General notes to all the above posts**

- All the candidates should annex the character certificate from their respective Grama Niladhari.
- Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- Candidates should possess excellent language skills in Tamil.
- All the selected candidates will be appointed as full-time on a contract basis for **One year.**
- Should be a citizen of Sri Lanka.
- Age should be not less than 18 years and not more than 35 years.
- All the selected candidates will become contributors to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), in which case, the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

The Application forms downloaded from here should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach **Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before Monday, 11 December 2023.

Applicants from the University System/ Government Depart ments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

The candidates who apply for **more than one** post should submit a separate application along with a **separate Bank slip for each of the posts.** Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

**Registrar**
**University of Jaffna**

## University of Jaffna
## Water Security in Northern Province through Participatory Action Research Project (WASPAR)
## Temporary Appointments

**Post of Temporary Research Assistant**
**Vacant – 03 post**

The University of Jaffna will entertain applications from qualified persons for the post of Temporary Research Assistant.

**Requirements:**

- Bachelor's degree in the field of Agriculture / Chemistry / Engineering / Food Science and Technology or other equal qualification from UGC approved University / Higher Education institution.
- Minimum 02 years post-qualifying experience in water research or any kind of participatory community-based social research or relevant field.
- High level of proficiency in written and spoken English and Tamil.
- High level of IT literacy, especially usage in the areas of Word, Excel, email and other tools.
- Ability to handle qualitative research methods, statistics, computational methods, database management and familiarity with methods within participatory action research.

**Remuneration:**
A monthly salary of LKR 60,800.00 will be paid.

**General note to all the above posts**

- All selected candidates will be appointed full-time for **one year.**
- Should be a citizen of Sri Lanka.
- Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- Age should be not less than 18 years and not more than 35 years.
- All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

The Application forms downloaded from here should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach **Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before 11 December 2023.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.


Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.

**Registrar**
**University of Jaffna**

(C-7760)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் டக்ளஸ்-ஜூலி சங் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கடற்றொழில் அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சுக்கு விஜயம் செய்திருந்தார். இந்நிலையில் அங்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். (நி-5-6)


## டெங்கு நோயால் மேலுமொருவர் பலி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இதுவரை 75,712 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை டெங்கு நோயால் மேலும் ஒரு உயிரிழப்பு பதிவாகியுள்ளதாகவும் டெங்கால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக உயர்வடைந்துள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5-6)

## வியட்நாமை சேர்ந்த துறவியான பிரபஞ்சஅழகி இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு)

பிரபஞ்ச அழகியாக முடிசூட்டப்பட்ட வியட்நாமைச் சேர்ந்த எலிசபெத் சுஜாதா, துறவு வாழ்க்கையில் நுழைந்து 15ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

துறவியாவதற்கு முன்பு, எலிசபெத் நான்கு முறை வியட்நாம் அழகியாக முடிசூட்டப்பட்டுள்ளதுடன் மிஸ் யுனிவர்ஸாகவும் பட்டம் பெற்றுள்ளார். பின்னர் வாழ்க்கையின் யதார்த்தத்தை உணர்ந்து துறவு வாழ்க்கையில் நுழைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மேலும் சுஜாதா பிக்குனி இலங்கைக்கு விஜயம் செய்து வரலாற்று வழிபாட்டுத் தலங்களைப் பார்வையிட்டுள்ளதுடன் மிஹிந்தலா ரஜமஹா விகாரைக்கு கடந்த திங்கட்கிழமை விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார். (நி-5-6)

### அரசாங்க அறிவித்தல்
### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
### நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2023.11.01 ஆம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் ம்ற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 2023.12.15 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளருக்காக,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7756)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2024 ஆம் ஆண்டிற்கான
## 2 ஆவது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 30.11.2023 - 07.12.2023 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 08.12.2023 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 08.12.2023 பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,412,500.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 165,200.00 | |
| 3 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 4 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 50,000.00 | 250.00 |
| 5 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 250,550.00 | 250.00 |
| 6 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 200,000.00 | 250.00 |
| 7 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 61,750.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை | 3,000.00 | 30,000.00 | 27,564,700.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 50,150.00 | |
| 3 | இணுவில் கோழிறைச்சிக்கடை | 750.00 | 7,500.00 | 291,000.00 | 250.00 |
| 4 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 5 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 6 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 370,500.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 750.00 | 7,500.00 | 625,001.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2023.12.15ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2023.12.15 ஆம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. கேள்வித்தொகைக்கு மேலதிகமாக அரசினால் விதிக்கப்படும் ஏனைய வரிகளையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி .சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(சி-7755) **30.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்


# 17 நாட்கள் தொடர் போரா

# 41 தொழிலாளர்கள் உயிருடன்



**(டில்லி)**

**இந்தியாவில் இமயமலை வட்டாரத்தில் இடிந்து விழுந்த சுரங்கப் பாதையில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களை 17 நாட்கள் தொடர் போராட்டத்தின் பின்னர் மீட்புப் பணியாளர்கள் மீட்டுள்ளனர்.**



உத்தரகாண்ட் மாநிலத்தில் நெடுஞ்சாலைச் சுரங்கப் பாதையின் ஒரு பகுதி இம்மாதம் 12 ஆம் திகதி இடிந்து விழுந்தது. அதில் 41 தொழிலாளர்கள் சிக்கியிருந்தனர்.

இந்திய தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் இந்த தொழிலாளர்களை மீட்கும் பணிகளை தொடங்கி 17 நாட்களாக சிக்கிய தொழிலாளர்களுக்கு 53 மீற்றர் நீள குழாய் மூலம் உணவு, தண்ணீர் மற்றும் ஒக்ஸிஜன் என்பவற்றை வழங்கி வந்தனர். மேலும் வைத்தியர்கள் அந்த இடத்திலேயே தங்கி சுரங்கப் பாதையினுள் சிக்கியிருந்தவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினர்.

தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்காக, மண் சரிந்து வீழ்ந்த வெளியேற்றத்தின் வழியாக துளையிட முயன்றன, ஆனால் கடந்த வெள்ளிக்கிழமையன்று அமெரிக்கத் தயாரிப்பான

டிரில் இயந்திரம் பழுதல
ததால் மீட்புப் பணி நிறு
ப்பட்டது. மீட்பு நடவ
கையின் இரண்டாவது
மாக, மீட்புப் பணியாள
செங்குத்தாக துளையி
இறுதியாக முதல் திட்ட
வெற்றி பெற முடிந்தது.

வெற்றிகரமாக து
தோண்டிய பிறகு, பல
குழுக்கள் துளைக்குள்
குழாயைச் செருகி தெ
லாளர்களை மீட்க முடிந்
இதில் கடைசி 2 மீற

## மூன்று இராணுவ விமானங்களை எகிப்துக்கு அனுப்புகிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

போர் நிறுத்தத்திற்கு நடுவே காசாவில் உள்ள பொது மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக அமெரிக்கா மூன்று இராணுவ விமானங்களை எகிப்துக்கு அனுப்பவுள்ளது.



தமது கட்சியினரின் அழுத்தத்திற்கு மத்தியில் பாலஸ்தீனிய குடிமக்களுக்கான உதவியை அதிகரிக்க அமெரிக்க ஜனாதிபதி பைடன் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விமானங்கள் குளிர் கால உடைகள், உணவு, மருத்துவப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்களை எடுத்துச் செல்லும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதன்படி முதல் விமானம் வடக்கு சினாயில் தரையிறங்கியதாகவும் மற்ற இரண்டு இராணுவ விமானங்களும் வரும் நாட்களில் எகிப்தை சென்றடையும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (நி-5-6)

## போர் நிறுத்தத்தின் 5
## 30 பாலஸ்தீனியர்க

(காசா)

போர்நிறுத்த ஒப்பந்தம் 2 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்ட நிலையில் 5 ஆவது நாளான நேற்று முன்தினம் 30 பாலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் விடுவிக்கப்பட்ட கைதிகளில் 15 பேர் பெண்கள் மற்றும் 15 பேர் சிறுவர், சிறுமிகள் அடங்குவதாக கட்டார் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேநேரம் காசாவில் இருந்து 12 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர்களில் 2 பேர் வெளிநாட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



தற்போதுவரை காசா
இருந்து 60 பெண்
மற்றும் குழந்தைகள்
80 இற்கும் மேற்பட்டோ
இஸ்ரேலில் உள்ள சி
களில் இருந்து 180 இ
மேற்பட்டோரும் விடு
ப்பட்டுள்ளனர்.

அனைத்து பண

## உக்ரைனை தாக்கிய பனிப்புயல் 8 பேர் உயிரிழப்பு

(கீவ்)

மத்திய மற்றும் தெற்கு உக்ரைனில் பனிப்புயல் தாக்கியதில், 5 பேரும் அண்டை நாடானா மால்டோவாவில் 3 பேரும் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தொடங்கிய ரஷ்ய-உக்ரைன் போர் சுமார் 21 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து வருகிறது. இதனால் உக்ரைனின் கீவ் உள்ளிட்ட நகரங்கள் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இந்நிலையில், மத்திய மற்றும் தெற்கு உக்ரைனில் பனிப்புயல் தாக்கியதில், 5 பேர்




உ
நாட
ந்த
ஜெ

யத
சரி
க்க
பாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ாட்டம் ...ன் மீட்பு



தடைந்
நிறுத்த
டவடிக்
து திட்ட
ளர்கள்
யிட்டு,
டத்தில்
து.
துளை
பணிக்
ள் ஒரு
தொழி
ழந்தது.
மீற்றர்

தூரம் பாதுகாப்பு கருதி கையால் குழி தோண்டப்பட்டிருந்தது.

41 தொழிலாளர்களை மீட்ட போது வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்ல நோயாளர் காவு வண்டிகள் தயாராக இருந்தன. மீட்கப்பட்டவர்கள் கவலைக்கிடமாக இல்லை என்றும் அனைவரும் நலமாக இருப்பதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6)

## ... ஆவது நாளில் ...கள் விடுவிப்பு



சாவில்
ண்கள்
ள் என
டோரும்
சிறை
இற்கும்
டுவிக்க

ணயக்

கைதிகளையும் விடுவித்தாலும் ஹமாஸ் அமைப்பை அழிப்பதோடு இஸ்ரேல் மக்களுக்கு காசா அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதி செய்வோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (நி-5-6)

...டயிரிழந்துள்ளனர். அதேபோல் அண்டை ...நாடானா மால்டோவாவில் 3 பேர் உயிரிழ...ந்ததாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ...ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பலத்த வேகத்துடன் பனிக்காற்று வீசி...யதால் ஆங்காங்கே மரங்கள், மின்கம்பங்கள் ...சரிந்துள்ளதுடன் இதனால் ஆயிரக்கண...க்கான கட்டடங்களின் மின்இணைப்பு ...பாதிப்படைந்துள்ளன. (நி-5-6)

## குறைவடைந்து செல்லும் கனேடியர்களின் ஆயுட்காலம்

(ஒட்டாவா)

கனேடிய மக்களது ஆயுட்காலம் அண்மை ஆண்டுகளாக குறைவடைந்து செல்வதாக அதிர்ச்சித்தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

கனேடிய புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தகவலின்படி கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சி யாக கனேடிய மக்களின் ஆயுட்காலம் குறைந்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் கனேடியர் ஒருவரின் ஆயுட்காலம் 82.3 வருடங்கள் எனவும், தற்பொழுது 2022 ஆம் ஆண்டில் இந்த ஆயுட்காலம் ஆனது 81.3 வயதாக குறைவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவு ஆயுட்காலம் குறைவடைந்த பகுதியாக சஸ்கட்ச்வான் பதிவாகியுள்ளது.

புற்றுநோய், இருதய நோய் போன்ற காரணிகளால் அதிகளவான கனேடியர்கள் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கோவிட் பெருந்தொற்று காரணமாகவும் மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பாலஸ்தீன மக்களுடன் இந்தியா உறுதுணையாக நிற்கும்

### இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி

(டில்லி)




பயங்கரவாதத்தை விடும்பாத கொள்கையுடன் அணுகுகிறோம் என ஐ.நா. பொதுச்சபைக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாலஸ்தீன மக்களுடன் இந்தியா நிற்பதாகக் கூறிய இந்தியப் பிரதிநிதி, இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினைக்கு இந்தியா எப்போதுமே இரு நாடுகளுக்கு இடையான தீர்வை முன் வைத்து வருகிறது.

மேலும் இஸ்ரேல் - பாலஸ்தீன் இடையே உரிய நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய இந்தப் போர் நிறுத்தம் உதவும். எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## மின்தூக்கி விபத்தில் 11 பேர் பலி, 75 பேர் காயம்

### தென்னாபிரிக்காவில் சோகம்



(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் உள்ள பிளாட்டினம் சுரங்கத்தில் மின்தூக்கியின் கம்பிக் கயிறு அறுந்து 200 மீற்றர் உயரத்திலிருந்து விழுந்ததால் 11 தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் 75 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த நாட்டின் ரஸ்டன் பேர்க் நகரத்திலுள்ள தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான அந்தச் சுரங்கத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மின் தூக்கியில் 86 பேர் இருந்தார்கள் என்பதுடன், பணி நேரம் முடிவடைந்து தொழிலாளர் குழுவினர் மாறும் போதே இந்த விபத்து ஏற்பட்டதென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ் விபத்துக்கான காரணம் குறித்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிளாட்டினம் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் தென்னாபிரிக்காவின் பல்வேறு சுரங்கங்களில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதனால் அதிக உயிர்ச் சேதம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் தென்னாபிரிக்க சுரங்க விபத்துக்களில் 49 பேர் உயிரிழந்துள்ளனர். இருப்பினும் முந்தைய ஆண்டில் இவ்வாறான சுரங்க விபத்துகளில் உயிரிழந்த 74 பேருடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை சற்று குறைவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமெரிக்காவின் முக்கிய இடங்களை படம் பிடித்துள்ள வடகொரியா

(பியாங்யாங்)


அமெரிக்காவின் முக்கிய இடங்களை தமது செயற்கைக்கோள் படம் பிடித்துள்ளதாக வடகொரியா அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. வடகொரியா கடந்த வாரம் புதிய செயற்கைகோள் ஒன்றை விண்ணில் செலுத்தியது. வடகொரியாவின் முதல் உளவு செயற்கைகோள் இது ஆகும்.

இந்த செயற்கை கோள் உளவு பார்த்து பல்வேறு புகைப்படங்களை எடுத்து அனுப்பியுள்ளதாக வடகொரியா கூறியுள்ளது. இந்த உளவு செயற்கைக்கோளை வடகொரிய ஜனாதிபதி கிம்னது அமெரிக்காவின் வெள்ளை மாளிகை, பென்டகன் மற்றும் கடற்படை நிலையங்களின் புகைப் படங்களை எடுத்துள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

மேலும் உரோம்நகரம், குவாமில் உள்ள ஆண்டர்சன் விமானப்படைத் தளம், பேர்ல் துறைமுகம், அமெரிக்க கடற்படையின் கார்ல் வின்சன் விமானம் தாங்கி போர்க்கப்பல் ஆகியவற்றையும் புகைப்படம் எடுத்துள்ளது.

இந்தப் புகைப்படங்களை ஜாங் உன் பார்த்துள்ளதாக அந்நாட்டிலிருந்து வெளியாகும் அதிகார பூர்வ பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து கொரிய மத்திய செய்தி நிறுவனம் தெரிவிக்கை யில், "உளவு செயற்கை கோள் நாளை உளவுப் பணியைத் தொடங்கும்" என்று தெரிவித்துள்ளது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்திலிருந்து மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தொல்பொருட்கள்

(கொழும்பு)

ஒல்லாந்தரால் கடந்த 1756 ஆம் ஆண்டு கண்டி அரச மாளிகையை தாக்கி அங்கிருந்து சூறையாடப்பட்ட 6 தொல்பொருட்கள் நெதர்லாந்தில் இருந்து மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

ஜேர்மனியிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL-554 மூலம் நேற்று காலை 05.05 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இந்த தொல்பொருட்கள் கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி இராசதானி மன்னனான கீர்த்திசிறிராஜசிங்கவின் திருமண வாள், மன்னருக்கு சொந்தமான வெள்ளி கஷ்கொட்டை, மன்னரின் தங்க கத்தி, பீரங்கி மற்றும் இரண்டு பெரிய துப்பாக்கிகள் போன்றனவே இவ்வாறு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அதேவேளை, குறித்த தொல்பொருட்களை கையளிக்கும் நிகழ்வு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவரால், இந்த தொல்பொருட்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்பு, அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அதனை தேசிய அருங்காட்சியக திணைக்களத்தின் பணிப்பாளரிடம் கையளித்தார். இந்த தொல்பொருட்களை கொழும்பு தேசிய அருங்காட்சியகத்திற்கு பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த நிலையில் இங்கிலாந்து உட்பட சுமார் இருபது வெளிநாடுகளில் இலங்கையில் இருந்து திருடப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவிலான கையிருப்பு உள்ளதுடன், அந்தப் பொருட்களும் எதிர்காலத்தில் தீவிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 800. | 800 |
| தக்காளி | 550 | 500 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 150 | 150 |
| கோவா | 400 | 340 | 350 | 500 |
| கரட் | 350 | 450 | 400 | 500 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 250 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 280 | 350 |
| பாகற்காய் | 650 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 230 | 240 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 350 | 280 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 320 | 300 | 600 |
| கறிமிளகாய் | 700 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 600 | 1000 |
| போஞ்சி | 650 | 700 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 350 | 260 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 1000 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 450 | 500 | 500 | 600 |
| வெங்காயப்பூ | — | — | - | — |
| முள்ளங்கி | 120 | 180 | - | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 200 | 50 | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | 120 | 250 |

# படைப்புழு தாக்கத்தினால் சோளச் செய்கை பாதிப்பு

(கொழும்பு)

படைப்புழுவின் தாக்கத்தினால் சோளப் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைப்புழுக்களால் ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு உடனடியாக தெளிவுபடுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பதுளை, மொனராகலை, அம்பாறை, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்த ஆண்டு சிறிய அளவிலான விவசாயப் பங்களிப்பு திட்டங்களின் கீழ் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# கடலில் நீராடிய மாணவன் மாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் புன்னக்குடா கடலில் நீராடிய பாடசாலை மாணவன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு காணாமல் போனவர் 16 வயதுடைய பாடசாலைமாணவராவார்.

குறித்த மாணவனை தேடும் பணியில் பிரதேச வாசிகள் மற்றும் ஏறாவூர் பொலிஸார் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். (நி-5-6)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2977

சசி




தரன்




குரு




பவி




கயல்





லக்ஷி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை! உங்கள் பெயர் [illegible] facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மருத்துவமனைக்கு விஜயம் செய்த கோபால் பாக்லே



(மன்னார்)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று மதியம் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

பிரதி அமைச்சர் காதர் மஸ்தானின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன், மாவட்ட பொது மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் புஸ்பகாந்தன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

மருத்துவமனையில் உள்ள குறைபாடுகள், தேவைகள் மற்றும் இதர பிரச்சினைகள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

மாவட்ட பொது மருத்துவமனையின் நீண்டகால தேவையாக உள்ள விபத்து மற்றும் அவசர பிரிவு நிர்மாணிப்பதற்கான நிதி உதவி, சி.ரி ஸ்கான் இயந்திரம் பெற்றுக்கொள்வதற்கான நிதி உதவி தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.(நி-5-6-285)

# பேசாலையில் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் பேசாலை பகுதியில் கேரள கஞ்சாவுடன் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள ஒரு வீட்டை சோதனையிட்ட போது ஒரு கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# புதுக்குடியிருப்பு கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட நபர் கைது

## களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இளைஞன் ஒருவரை புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தனிமையில் வசிக்கும் வயோதிபர்களின் வீடுகளுக்கு செல்லும் குறித்த இளைஞன் அங்கு காணப்படும் காஸ் சிலிண்டர்களை களவாடுவதுடன் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன்போது களவாடப்பட்ட 16 காஸ் சிலிண்டர்கள், தண்ணீர் மோட்டார், மிதிவண்டி, வயர் ரோல்கள், கதிரைகள் மற்றும் தங்கச்சங்கிலி உள்ளிட்ட பெருமளவான பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (நி-5-6-299)

# யாழில் அகிலத்திருநாயகிக்கு நினைவுச்சின்னம் வழங்கி வைப்பு



(அராலி)

72 வயதில் இரண்டு தங்கப்பதக்கங்கள் வென்று உலக சாதனை படைத்த முல்லைத் தீவைச் சேர்ந்த அகிலத்திரு நாயகிக்கு யாழில் கௌரவிப்பு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்சிறைச் சாலையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாதனைப் பெண் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக வைத்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் உத்தி யோகத்தரால் கௌரவிக்கப்பட்டதையடுத்து வாகன பேரணியாக அகிலத் திருநாயகி யாழ்.சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (நி-5-6-33-104)



கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாண தொழிற்துறை திணைக்களம் நடத்திய பெண்களுக்கான பற்றிக் பயிற்சி நெறியினை நிறைவுசெய்த பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், பொருள் விற்பனைக் கண்காட்சி நிகழ்வுகளும் நேற்று கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:யதுபாஸ்கரன், சப்தசங்கரி)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)


யா/இடைக்காடு மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ள பாராட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் கு.அகிலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-5-6)

# புலிச்சின்ன ஆடை அணிந்த நபருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

மாவீரர் தினத்தன்று பிரபாகரன் படம் மற்றும் புலிச்சின்னம் ஆகியன பொறித்த ரீசேட் அணிந்து வந்த குற்றச்சாட்டில் கைதான இளைஞனை எதிர்வரும் 12.12.2023 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் மேற்படி ரீசேட்டுடன் பிரசன்னமாகியிருந்த நபரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தியிருந்த வேளை 14தினங்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (5-6-30-33-104)



தேசிய மட்டத்தில் புலியாட்டம் மற்றும் பரதநாட்டியம் "சுதந்திரம்" ஆகிய இரு போட்டிகளிலும் மட்டக்களப்பு மயிலம் பாவெளி விபுலாந்த வித்தியால மாணவர்கள் 2 ஆம் இடத்தை பெற்றுள்ளனர்.

# புதைகுழி அகழ்வு நேற்றுடன் நிறைவு மீண்டும் மார்ச்மாதம் ஆரம்பம்

## சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியின் இரண்டாம் கட்டம் நேற்றுடன் நிறுத்தப் பட்டுள்ளது. மீண்டும் அடுத்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனக சபாபதி வாசுதேவா தெரிவித் தார்.

கொக்குத்தொடுவாய் மனித் புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பில் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மனித புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 39 மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுப் பணியானது நேற்றுடன் இரண்டாம் கட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

மேலதிகமாக இனங் காணப்பட்டுள்ள உடற்பாகங்களை மீட்பதற்காக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியானது அடுத்துவரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதகாலம் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 341



குந்தவையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் வந்தாள்.

கடைசிச் சித்திரத்தண்டை வந்து நின்றதும் குந்தவை காலாந்தககண்டரை ஏறிட்டுப் பார்த்து, "ஐயா! பழுவேட்டரையர்கள் பரம்பரையாகச் சோழ குலத்துக்கு ஒப்பற்ற சேவை புரிந்து வந்திருக்கிறார்கள்" என்றாள்.

"அம்மையே! அது எங்கள் பாக்கியம்" என்றார் காலாந்தக கண்டர்.

"அந்தச் சேவைக்கெல்லாம் ஈடாகக் கூடியது இந்தச் சோழ சாம்ராஜ்யந்தான் என்பதில் சந்தேகமில்லை."

"தாயே! இது என்ன வார்த்தை?"

"ஆனாலும் சக்கரவர்த்தியின் ஆயுட்காலம் முடிந்து கைலாச பதவியை அடையும் வரையில் தாங்கள் காத்திருக்கலாம் அல்லவா? சாம்ராஜ்ய அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு இவ்வளவு அவசரப்பட வேண்டுமா?"

இந்த வார்த்தைகள் காலாந்தக கண்டரின் இருதயத்தில் கூரிய அம்புகளைப் போல பாய்ந்தன என்பதை அவருடைய முகம் காட்டியது. அவரது நெற்றியில் வியர்வைத் துளிகள் துளித்து நின்றன. மீசை துடிதுடித்தது. கை, கால்கள் வெடவெடத்து ஆடின.

காலாந்தக கண்டர் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு குந்தவையைப் பார்த்து, "அம்மையே! இது என்ன இவ்வளவு உக்கிரம்? சொல்லம்பினாலேயே என்னை யமலோகத்துக்கு அனுப்பிவிடுவதென்று உத்தேசமா?" என்றார்.

"ஐயா! அத்தகைய சக்தி என்னிடம் இல்லை என்பது தங்களுக்கே தெரியும். காலாந்தகரிடம் அணுக யமனே பயப்படுவானே? என் போன்ற பேதைப் பெண்ணால் அது முடியுமா?"

"அம்மணி! இத்தகைய கொடிய வார்த்தைகளைச் சொல்வதைக்காட்டிலும் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை என் காதில் தாங்கள் ஊற்றலாம்! தேவி இவ்வளவு மறக்கருணை காட்டும்படி அடியேன் என்ன தவறு செய்தேன்?"

"தங்கள் தவறைப் பற்றிச் சொல்ல நான் யார்? என்னுடைய தவறு இன்னது என்பதைத்தான் தாங்கள் சொல்ல வேண்டும். என் தந்தையின் நோயைத் தீர்ப்பதற்கு மூலிகை கொண்டு வருவதற்காக ஆள் அனுப்பியது என் பேரில் தவறா?"

"இல்லை, அம்மணி, அது ஒரு நாளும் தவறாகாது."

"பழையாறை வைத்தியர் மகனைக் கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வருவதற்காக நான் அனுப்பினேன் என்பது தங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். அம்மணி!"

"இன்றைய தினம் அந்த வைத்தியர் மகனைக் கயிற்றால் கட்டி வீதியில் உம் குதிரை வீரர்கள் இழுத்துக் கொண்டு வந்ததைப் பார்த்தேன். கட்டளையிட்டது தாங்கள்தானே? அவனை அனுப்பியவள் நான் என்று தெரிந்துதானே இந்த ஏற்பாடு செய்தீர்?"

"ஆம், பிராட்டி. ஆனால் அவன் ஒற்றன் என்பது தெரியாமல் தாங்கள் அனுப்பியிருக்கலாம் அல்லவா?"

"பழையாறை வைத்தியர் மகனாவது? ஒற்றனாவது? அந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறீரா?"

"தாயே! அவனே ஒப்புக்கொண்டிருந்தால் நம்ப வேண்டியதுதானே?"

இளவரசி சிறிது திடுக்கிட்டு, "அவனே ஒப்புக்கொண்டானா? அது எப்படி? என்னத்தை ஒப்புக்கொண்டான்?" என்று கேட்டாள்.

"தன்னோடு வந்த இன்னொருவன் ஒற்றன் என்று இவன் ஒப்புக்கொண்டான். அந்த இன்னொருவன் மூலிகைக்காக உண்மையில் பிரயாணம் புறப்படவில்லையென்றும் இலங்கையில் யாருக்கோ கடிதம் கொண்டு சென்றதாகவும் இவன் ஒப்புக் கொண்டான்."

"இவன் பெரிய மூடன் ஏதாவது உளறியிருப்பான். இவனுடன் சென்ற இன்னொரு ஆளையும் அனுப்பியவள் நான்தான். அது தங்களுக்குத் தெரியும் அல்லவா?"

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## கிணற்றுக்குள் வைர மோதிரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

"பீர்பால்! நீ என்ன நினைக்கிறாய்?" என்று அக்பர் கேட்க, "அதைப் பற்றித்தான் நானும் யோசிக்கிறேன்" என்ற பீர்பால், தன் தலைப் பாகையை அவிழ்த்து விட்டுத் தனது தலையைச் சொறிந்தார்.

"தலையைச் சொறிந்தால் மட்டும் யோசனை தோன்றிவிடுமா?" என்று மிட்டாலால் என்ற அதிகாரி பீர்பலை நோக்கி ஏளனத்துடன் கேட்டார். "தலையைச் சொறிந்தால் எனக்கு நல்ல யோசனை தோன்றும்.

ஆனால் உங்களுக்குத் தோன்றாது." என்று பீர்பால் லாலை நோக்கிக் கூறினார். "எனக்குத் தோன்றாது. ஆனால் உனக்குத் தோன்றுமோ? அது எப்படி?" என்று மிட்டாலால் கேலியாக் கேட்க, "எனக்கு மூளையிருக்கிறது. அதனால் தலையைச் சொறிந்ததால் மூளை வேலை செய்யும். ஆனால் உங்களுக்கு என்ன செய்தாலும் யோசனை தோன்றாது" என்று பீர்பால் அவனுக்கு பதிலடி கொடுத்தார். "பிரபு! எனக்கு யோசனை தோன்றிவிட்டது." என்று பீர்பால் உற்சாகத்துடன் கூற, "அப்படியா? நீ எப்படி மோதிரத்தை கிணற்றுள் இறங்காமலே எடுப்பாய்?" என்று ஆர்வத்துடன் அக்பர் கேட்டார்.



நூலின் மறுமுனையை கிணற்றுக்கருகே இருந்த ஒரு மரத்துடன் சேர்த்துக் கட்டினார். பிறகு, வைரக்கல்லைக் குறிபார்த்து ஏற்கெனவே கிணற்றின் உள்ளே இருந்த சாணத்தின் மீது வீசியெறிந்தார். கல் சரியாக சாணத்தின் மீது விழுந்தது.

தன்னுடைய வேலைக்குத் தானே ஒரு சபாஷ் போட்டுக் கொண்டு, அங்கிருந்த காவலர்களை அதைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு பீர்பால் வீடு திரும்பினார். வீடு திரும்பியபின் உணவருந்திவிட்டு நிம்மதியாகத் தூங்கினார். பிறகு மாலையில் எழுந்து கிணற்றை நோக்கிச் சென்றார். காலையில் அவர் வீசியெறிந்த சாணம் வெயிலில் நன்றாகக் காய்ந்து உலந்திருந்தது. அதன் மீது அவர் வீசிய கல்லும் சாணத்துடன் நன்றாக ஒட்டிக் கொண்டிருந்தது. பிறகு பீர்பால் மிகவும் நிதானமாகவும் ஜாக்கிரதையாகவும் நூலைப் பிடித்து மேலே இழுக்க, கல் கிணற்றுக்குள் இருந்து மேலே வந்துவிட்டது. கல்லில் ஒட்டிய சாணமும் உலர்ந்து போய் அதனுடன் சேர்ந்து பத்திரமாக இருந்தது. அதிலிருந்து மோதிரத்தை எடுத்து, சுத்தமாகக் கழுவிய பின், பீர்பால் அரண்மனை தர்பாருக்குச் சென்றார்.

அந்த நேரத்தில் அக்பர் தர்பாரில் தன் அதிகாரிகளுடன் அமர்ந்திருந்தார். அவரை வணங்கிய பீர்பால், "பிரபு! நான் வெற்றிகரமாகத் தங்கள் மோதிரத்துடன் வந்திருக்கிறேன்" என்றதும் அக்பருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"கிணற்றுள் இறங்காமலேயே மோதிரத்தை எடுக்க உன்னால் எப்படி முடிந்தது?" என்று அக்பர் ஆவலுடன் கேட்க "மூளையைப் பயன்படுத்தினால் முடியாதது ஒன்றுமில்லை என்று நீங்கள் சொன்னதை நிரூபித்து விட்டேன்" என்று கூறிய பீர்பால், தான் மோதிரத்தை மீட்டதை விளக்கிக் கூறினார். "பலே! சபாஷ்! உன்னைப் போல் புத்திசாலியை நான் பார்த்ததே இல்லை." என்று பாராட்டிய அக்பர் பொற்காசுகள் நிரம்பிய பையை பீர்பாலுக்குப் பரிசளித்தார்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேசக் குற்றவாளிகள் தேர்தலில் போட்டியிடலாமா?

குற்றவாளி என்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டால், அவர்கள் செய்த குற்றத்துக்குரிய தண்டனையும் அறிவிக்கப்பட வேண்டும்.

அந்தத் தண்டனையானது, குற்றத்தின் தன்மையை பொறுத்து அமையும். இதுவே பொது நீதி.

அண்மையில் இலங்கையின் உயர்நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பை வழங்கியிருந்தது.

இந்த நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு யார் காரணம் என்பதை உயர்நீதிமன்றம் அறிவித்தமையே அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாகும்.

அந்த வகையில் இலங்கையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ ஆகியோரே பொருளாதாரக் குற்றவாளிகள் என்பது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு.

குற்றவாளிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் செய்த குற்றத்துக்கான தண்டனை அறிவிக்கப்பட வேண்டும். எனினும் உயர்நீதிமன்றம் அந்தத் தண்டனையை அறிவிக்கவில்லை.

அதாவது ஒரு நாட்டின் பொருவாதா ரத்தை நிர்மூலமாக்கியவர்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்தைக் கந்தறு நிலைக்குக் கொண்டு வந்தவர்களுக்கும் நீதிமன்றம் தண்டனை வழங்குவதைவிட, அவர்களுக்கு நாட்டு மக்கள் தக்க தண்டனை கொடுப்பதே பொருத்தம் என்ற காரணத்தினால்கூட, அவர்களுக்கான தண்டனை அறிவிக்கப்படாமல் விடப்பட்டிருக்கலாம்.

ஆம், உயர்நீதிமன்றத்தால் பொருளாதார குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட மூவரும் பொதுமக்களின் வாக்குகளால் ஆட்சிப்பீடத்துக்கு வந்து நாட்டை நாசமாக்கியவர்கள்.

எனவே பொதுமக்கள் தகவிலர்களுக்கு வாக்களித்து அவர்களை சிம்மாசனத்தில் அமர்த்திவிட, அவர்கள் தாங்கள் செல்லும் இடமெல்லாம் இருக்கக்கூடிய பெறுமதியான சொத்துக்களைக் கபளீகரம் செய்வது, அரச நிதியைச் சூறையாடுவது ஆகிய மிகமோசமான காரியங்களில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே மேற்படி பொருளாதார மோசடி ஏற்படுவதற்கு ஏதோவொரு வகையில் பொது மக்களும் அதிகூடிய பங்களிப்பைச் செய்துள்ளனர்.

ஆகையால் பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு பொதுமக்கள் தண்டனை வழங்குவதுதான் பொருத்தம் என்று கூடக் கருதப்பட்டிருக்கலாம்.

தவிர, நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக மிக மோசமான பாதிப்பை இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் அனுபவிக்கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்டவர்கள் பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்குத் தண்டனை வழங்குகின்ற நடைமுறை உலகில் உண்டு.

அதனடிப்படையில் பொருளாதாரக் குற்றவாளிகள் இனி எந்தத் தேர்தலிலும் போட்டியிட முடியாது என்றவாறான தீர்ப்பை பெற்றுக் கொள்ள, இந்த நாட்டு மக்கள் உயர்நீதிமன்றை நாட வேண்டும். அவ்வாறு செய்தால் அதுவே முதலாவது தண்டனைக் கோவையாக இருக்கும்.

## அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு சில பொருளாதார வல்லுநர்கள் பரிந்துரைகளை முன்வைத்திருந்தாலும் அரசாங்கம் என்ற ரீதியில் இதுபற்றிய முடிவு எதனையும் இன்னமும் எடுக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நேர்காணலில் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் தொடர்பில் செஹான் சேமசிங்கவிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

இதன்போது அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் எதுவும் அரசுக்கு உள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், "ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு சில பொருளாதார வல்லுநர்கள் அதற்கான பரிந்துரைகளை முன்வைத்திருந்தாலும் அரசாங்கம் என்ற ரீதியில் இதுபற்றிய முடிவு எதனையும் அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை.

சுகாதாரத் திணைக்களத்தில் அத்தியாவசியப் பணிகளுக்கான ஆட்சேர்ப்பு குறைவாகவே உள்ளது. அரசின் செலவினங்கள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன.

2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தை இலக்காகக் கொண்டு, வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மிகவும் வலுவான மற்றும் பயனாளிகளுக்கு நட்பான நடைமுறையை அறிமுகப்படுத்தி வரி வலையை விரிவுபடுத்த முயற்சிக்கிறது" என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மத்தள விமான நிலையம் இலாப மீட்டும் தளமாக மாறும்

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

அம்பாந்தோட்டையிலுள்ள மத்தள சர்வதேச விமான நிலையத்தை இலாபம் ஈட்டும் தளமாக மாற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி வேலைகளுக்கு உதவுவதற்காக ஏழு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்தில் வைத்து விமானங்களை ஒழுங்கமைத்தல் செய்தல் மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்வதன் மூலமாக அதிகமான இலாபம் ஈட்டக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அமைச்சர் இதன் போது கூறியிருந்தார்.

மத்தள விமான நிலையத்தினால் ஏற்பட்ட இழப்புகள் 1.5 பில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும், விமான நிலையம் செயற்படத் தொடங்கிய பின்னர் ஏற்பட்ட மிகக் குறைந்த இழப்பு இது தான் எனவும் அமைச்சர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிவிழந்து கிடக்கும் விமான நிலையத்திற்குரிய அபிவிருத்திகளைச் செய்து மீண்டும் இலாபம் ஈட்டும் தளமாக அதனை உருவாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ம-7)

சுகாதார சீர்கேடு

## கல்வியங்காட்டில் உணவகம் ஒன்றுக்கு சீல் வைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார சீர்கேடு காரணமாக கல்வியங்காட்டில் உணவகம் ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாநகரசபையின் நல்லூர் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் ஆறுமுகதாசன் தலைமையிலான குழுவினரால், கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள உணவகம் திடீர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது பல சுகாதார சீர்கேட்டு குறைபாடுகள் இனங்காணப்பட்டது. ஏற்கனவே பல தடவைகள் அறிவுறுத்தப்பட்ட நிலையிலும் தொடர்ந்து சுகாதார சீர்கேட்டுடனேயே உணவகம் இயங்கி வந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் திகதி முடிவடைந்த காலாவதியான உணவு பொருட்களும் பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து உணவக உரிமையாளரிற்கு எதிராக நீதிமன்றில் நேற்று புதன்கிழமை பொது சுகாதார பரிசோதகர் ஆறுமுகதாசன் இனால் சுகாதார சீர்கேடு, காலாவதியான உணவு பொருட்கள் வைத்திருந்தமை என்பவற்றிற்கு தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதவான் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும்வரை உணவகத்தினை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகரிற்கு கட்டளை வழங்கினார். இதனையடுத்து உணவகம் சீல் வைத்து மூடப்பட்டது. (ம-7,33,104)

## கார் மோதியதில் பெண் மரணம்

காலி - கொழும்பு பிரதான வீதியில் அம்பலாங்கொட, மாதம்பகம வேனமுல்ல பகுதியில் வீதியை கடக்க முற்பட்ட பெண் காருடன் மோதி விபத்துக் குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது நேற்று காலி - கொழும்பு பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது.

வேனமுல்ல பிரதேசத்தில் தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நடத்தி வந்த ஐம்பது வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு உயிரிழந்த பெண்ணின் சடலம் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023**

**"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும்வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."**

*- ஜோன் மூர்*
*(அமெரிக்க இயற்கையியலாளர்)*

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
**16 Days of Activism against Gender Based Violence**
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"ஆரோக்கியமான கலந்துரையாடல்களே வன்முறையற்ற வீடுகளை உருவாக்குவதற்கான திறவுகோலாகும். மௌனம் விடுத்து குடும்ப வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம்!!!"

JSAC | 16 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
- சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு
- அரசசேவை ஆணைக்குழு
- குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்)
- நீதிமன்றம்
- தாபனக் கோவை
- நிதிப்பிரமாணங்கள்

### கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்

அரசியல் யாப்பின் மூலம் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம். தேசிய மட்டத்தில், மாகாண மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் உள்ள அரச நிறுவனங்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படும். உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழல்கள் தொடர்பில் மிகை அறவீடு செய்யும் அதிகாரம் உண்டு. கணக்காய்வு அறிக்கை பாராளுமன்றத்திற்கே சமர்ப்பிக்கப்படும்.

பாராளுமன்றத்தின் பொதுநிதி தொடர்பான தெரிவுக்குழு மற்றும் அரச தொழில் முயற்சி தொடர்பான தெரிவுக்குழு என்பன அறிக்கையை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொள்ளும். கணக்காய்வாளர் நாயகத்தின் நியமனம் அரசியல் அமைப்புச்சபையின் அனுமதியுடன் செய்யப்படும்.

மாவட்ட மட்டத்தில் பிரதேச அலுவலகங்கள் உண்டு. கூட்டுறவுச் சங்கங்களைப் போன்ற அரைகுறை அரச நிறுவனங்களைக் கணக்காய்வு செய்யப்படுவதில்லை. அரச நிறுவனங்களில் இடம்பெறும் நிதி மோசடிகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு அறிவிக்க முடியும்.

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு

17ஆவது அரசியலமைப்பு திருத்த மூலம் நிறுவப்பட்ட அமைப்பாகும். அரசியல் அழுத்தமின்றி பொலிஸ் திணைக்களத்தைப் பராமரித்தல் அடிப்படைக் குறிக்கோளாகும். பொலிஸாரின் இடமாற்றம், பதவிஉயர்வு, ஒழுக்காற்று விசாரணைகள் என்பன அரசியல் அழுத்தங்களின்றி செய்வதற்கு வழிசெய்தல். பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கையாள்வதற்கு அதிகாரம் உண்டு.

பொலிஸ் அதிகாரிகள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் செயற்பட வழிசமைத்தல். அதன் மூலம் பொலிஸிற்குச் சொந்தமான பொதுச் சொத்துகளுக்கு எதிரான குற்றவியல் குற்றங்கள், பொதுநிதி, நிறுவனப் பராமரிப்பு தொடர்பான விசாரணைகள் ஊழல்களை ஒழிக்கும் பொருட்டு நடைமுறைப்படுத்த முடியும். பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரித்து தண்டனைகளை வழங்க முடியும்.

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 1994ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினூடாகஸ்தாபிக்கப்பட்டது. ஆணையாளர்கள் அரசியலமைப்புச் சபையின் ஆலோசனைக்கு இணங்க ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தல் என்பன பிரதான பணிகளாகும்.

### இவ்வாணைக்குழுவிற்குரிய சில சிறப்பதிகாரங்கள்

நபரொருவரை தடுத்து வைத்திருக்குமிடத்தை பரிசோதித்து அவ்விட வசதிகளை அதிகரிக்க பணிப்புரை விடுத்தல், அடிப்படை உரிமைகளை மதித்தல், நடைமுறைப் படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக வேண்டி அவசியமான நிர்வாக செயற்பாட்டு ஒழுங்குகளை கண்காணித்தல், அடிப்படை உரிமை மீறல் மற்றும் அதனுடன் தொடர்பான செயற்பாடுகளில் முறைப்பாடுகளை ஏற்றுத் தீர்த்து வைத்தல் மற்றும் பணிப்புரை வழங்கல்.

நீதிமன்றத்தினால் ஆணைக்குழுவிற்கு சாட்டப்படும் விடயங்கள் தொடர்பாக முறையான விசாரணைகளை நடத்தல், அதற்காக வேண்டிய அரச அதிகாரிகள் மற்றும் அரச ஆவணங்களை கொணர்தல்.

தலைமைக் காரியாலயம் அல்லது பிரதேசக் காரியாலயங்களில் நேரடியாக அல்லது தபால், தொலைநகல் அல்லது தொலைபேசி ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். இதற்கு சட்டத்தரணி உதவி தேவையில்லை.

### சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு

17 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் நிறுவப்பட்டது. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்தல் அடிப்படைக் குறிக்கோளாகும். தேர்தல் முறைகேடுகளையும் ஊழல்களையும் தடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உண்டு. தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொதுச் சொத்துக்களைப் பாவிப்பதைத் தடுத்தல், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்காக ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டல், தேர்தல்களின்போது நியாயமான முறையில் அரச ஊடகங்களை ஈடுபடுத்தல்.

நியாயமான தேர்தலுக்காக பொலிஸாரையும் பாதுகாப்புப்பிரிவினரையும் சேவையில் ஈடுபடுத்தல், அரச உத்தியோகத்தர்களை வழிநடத்தல் ஆகிய அதிகாரங்கள் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு.

### சுதந்திரமான அரசசேவை ஆணைக்குழு

17 ஆவது அரசயாப்பிற்கான திருத்தம் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம். அரச சேவையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது அடிப்படைக் குறிக்கோளாகும். அரசசேவையின் நியமனங்கள், பதவி உயர்வு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பற்றிய அதிகாரங்கள் உண்டு. அரசு சேவை அதிகாரிகளின் ஒழுக்கக்கேடு நடவடிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு. ஊழல் குற்றச்சாட்டின் நிமித்தம் பணி நீக்கம் செய்யும் அதிகாரம் உண்டு. மாகாண அரச சேவை. ஆணைக்குழு அந்தந்த மாகாண மட்டத்தில் அரச உத்தியோகத்தர்களின் ஒழுக்கக்கேடான நடவடிக்கைகள் பற்றி செயற்படுவார்கள்.

### குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) (நிர்வாகம் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர்)

இவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். அரசியல் யாப்பினூடாக ஏற்படுத்தப்பட்ட பதவியாகும். அரச திணைக்களங்கள், நியதிச்சபை, கூட்டுத்தாபனங்கள், அரச அதிகார சபைகள், மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிரான முறைப்பாடுகளைப் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளல் இவரது கடமையாகும்.

1994 இன் பின்னர் ஒருவர் தனது கோரிக்கையை நேரடியாகவே ஒம்புட்ஸ்மனுக்கு அனுப்பி வைக்க முடியும். ஒம்புட்ஸ்மனுடைய விசாரணை அறிக்கையின் பிரதி குறிப்பிட்ட நிறுவனத்தலைவர் ஊடாக ஏற்புடைய உத்தியோகத்தரின் கோப்பில் சேர்க்கப்படும். தேசிய ஒம்புட்ஸ்மன் ஒருவரும் அவருக்கு பிரத்தியோக ஓர் அலுவலகமும் உண்டு.

பொலிஸ் மற்றும் கல்வித் திணைக்களத்திற்கு மாத்திரம் திணைக்கள ஒம்புட்ஸ்மன் ஒருவர் மற்றும் பிரத்தியேக அலுவலகம் உண்டு. நியமனங்களை ஜனாதிபதி செய்வார்.

### நீதிமன்றம்

நீதிமன்றத்திற்கு இரு வகைகளில் "ஊழலை" கட்டுப்படுத்தும் ஆற்றல் உண்டு. அரச யாப்பின் 3ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் மூலம் அரச சேவையில் நியமனங்கள், பதவி உயர்வுகள், சேவைநீக்கம், ஆட்சேர்ப்பு என்பன இடம் பெறும் சந்தர்ப்பங்களில் ஊழலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றவியற் சட்டத்தின் கீழ் லஞ்சம் கோருதல், வழங்குதல் பொதுச்சொத்துக்களின் பாவனை என்பன தண்டனை பெறக்கூடிய குற்றமாகும். அதேசமயம் குற்றவியல் சட்டக்கோவைக்கு அமைய பிடி ஆணை இன்றி கைது செய்யப் படக்கூடிய குற்றமுமாகும்.

### தாபனக் கோவை

அரசின் மனித வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவது அடிப்படைக் குறிக்கோள். ஊழலுக்கு அடிகோலும் அரச சேவை நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய அவசியமான சட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்கள் நியாயமற்ற முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதும் ஊழலில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள வசதிகள் உண்டு.

### நிதிப் பிரமாணங்கள்

அரச நிதி மற்றும் ஏனைய சொத்துக்களை உரிய முறையில் ஈடுபடுத்துவது தொடர்பான ஒழுங்கு விதிகள். அரசு பொருட்களை விலைக்கு வாங்கும்போது ஊழியர்களின் செலவினங்களின் போதும் அனுசரிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் அரச நிதி ஈடுபடுத்தப் படுகையில் ஊழலை தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள் உண்டு.

### அமைப்புக்களும் சட்டங்களும் இருந்தும் தொடர்ந்தும் ஊழல் ஏன் ஏற்படுகின்றது?

லஞ்ச ஊழல் விசாரணைகள் ஆணைக்குழுவை விட இவ்வாறான அமைப்புக்களும் சட்டங்களும் இருந்தும் தொடர்ந்தும் ஊழல் ஏன் ஏற்படுகின்றது? இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர்...

யம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று மாலை 3 மணிக்கு யாழ்ப் பாணத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை நடத்தவுள்ள அமைச்சர் நாளை இடம்பெறுகின்ற திறப்பு விழா நிகழ்வொன்றிலும் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7)

## விபரீத...

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை 4ஆம் குறுக்குத் தெரு வீதியைச் சேர்ந்த சாருஜன் (வயது - 22) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறு வயதில் தந்தை பிரிந்து சென்ற நிலையில் தாயாரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த நிலையில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

சடலம் உடல் கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## ஜனாதிபதி...

ரணில் விக்கிரமசிங்க நேற்று புதன்கிழமை ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டார்.

இதன்போது மூன்றாம் உலக நாடுகளுக்கான காலநிலை நீதிமன்றத்தை நிறுவுதல் மற்றும் வெப்ப மண்டல மன்றத்தை நிறுவுதல் ஆகிய முன்மொழிவுகளையும் ஜனாதிபதி அங்கு முன்வைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஐம்பொன்னி...

குறித்த ஆலய கர்ப்பக்கிரகத்தினுள் இருந்த 4 இலட்சம் பெறுமதியான ஐம்பொன்னினாலான அம்மன் சிலை, அம்மன் தாலி, அம்மனின் தோடு உள்ளிட்ட ஒன்றரை பவுண் நகை திருடப்பட்டுள்ளதோடு ஆலய வளாகத்தில் இருந்த உண்டியல் உடைக்கப்பட்டு ஒரு தொகை பணமும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் ஆலயபூசகரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7 மணி அளவில் ஆலய பூசகர் ஆலயத்திற்கு சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்டபோதே குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. (ம-7,33,104)

## காங்கேசன்...

யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பால்கே நேற்று புதன்கிழமை காங்கேசன்துறை துறைமுகப் பகுதிகளை பார்வையிட்டார்.

காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் கட்டுமானங்கள் மற்றும் தேவைகள் குறித்து இதன்போது யாழ் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் தூதுவருக்கு விளக்கமளித்தனர். (ம-7,33,104)

## அராலி...

மேலும் தெரிவிக்கையில்,

அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதி பொது அமைப்புகளிடம் பிரதேச செயலாளரால் இது தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் குறித்த விடயத்தை எமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் அராலி முதல் பொன்னாலை வரையான கரையோர பகுதியை வனவளப் பாதுகாப்பு திணைக்களத்தின் வளப் பிரதேசமாக ஒதுக்கீடு செய்வதை முற்றிலும் நிராகரித்திருக்கிறார்கள்.

கரையோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரமே கடற்கரையை நம்பியே காணப்படுகின்றது. மாட்டுவண்டி சவாரித்திடல், சுடுகாடுகள், விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. ஆகவே வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் முன்மொழிவை முற்றிலும் நிராகரிக்கிறோம்.

குறித்த பகுதியை வன வள பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கினால் விகாரைகள், சிங்கள குடியேற்றம் வரவும் வாய்ப்புள்ளது என அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் குறித்த முன்மொழிவை நிராகரித்து வனவள பாதுகாப்பு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்ப வேண்டும். இல்லையேல் இதற்கு எதிராக போராட்டம் நடத்துவோம் என்றார். (ம-7,33,104)

## பளையில்...

பிரிவுக்குட்பட்ட புலோப்பளை பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த குணம் கணேசன் (வயது-20) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315,316)

## மாவீரர்...

திற்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வின் போது, விடுதலைப் புலிகளின் போராளிகள் போன்ற ஆடைகளை சில சிறுவர்கள் அணிந்து இருந்தனர் என சில புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வந்தன.

அவை தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், படங்களில் இனம் காணப்பட்ட சிறுவர்களின் பெற்றோரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அவர்களின் வாக்கு மூலங்களை பெற்றுள்ளனர்.

வாக்குமூலங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுக்க உள்ளதாகவும், எவரையும் இதுவரையில் தாம் கைது செய்யவில்லை எனவும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ம-7,33,104)

## புதை...

லியாறு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைசேர்ந்த ஐந்து பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்கள்மீதான சட்ட நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனாதிபதித் தேர்...

உள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள ஜய ஸ்ரீ மகா போதிக்கு விஜயம் செய்தபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, தேசிய மட்டத்திலான தேர்தலை இலக்கு வைத்து ஜனவரி முதல் கிராமிய மட்டத்திலான தேர்தல் பிரசார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய சம்மேளனம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதி நடக்கவுள்ளது.

இந்த சம்மேளனத்தின் போது, கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.11.29
சீட்டிழுப்பு இலக்கம் 139
P 2 9 6 4 8 4 P

தன நிதானய
திகதி - 2023.11.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1343
B 03 09 79 81 B
17441

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3555
சீட்டிழுப்பு திகதி 29.11.2023
X 13 19 69 75
X 14580

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.29
சீட்டிழுப்பு இலக்கம் 0622
மீனம் 09 26 38 61 மீனம்
48713 26

மஹஜன சம்பத
திகதி 2023/11/29
சீட்டிழுப்பு இலக்கம் 5313
H 0 9 7 6 9 3

மெகா பவர்
திகதி 29/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1661
R 06 04 19 43 70
57415

சுபீர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 29.11.2023 வெற்றி வாரம் 021 வர்ணம் பச்சை
R 9 6 0 9 0 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,563,863.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2287 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.29 தினம் புதன்கிழமை
21 35 38 63 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,776,124.00

சனிதா
திகதி 2023.11.29 வெற்றி வாரம் 4448 வர்ணம் ஊதா
36 52 68 71 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,314,116.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3999 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.29 தினம் புதன்கிழமை
02 03 15 24 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,687,192/-

ஜயோதா Jayoda
திகதி 2023.11.29 வெற்றி வாரம் 1978 வர்ணம் மஞ்சள்
01 05 30 39 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,725,376.00

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2113
சீட்டிழுப்பு திகதி: 2023.11.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,527,416/-
02 34 60 68 I

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 06 01 49 57 59
1463
2023.11.29 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 471,079,414.20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி பரீட்சைத்தாள் நால்வர் சந்தேகத்தில் கைது

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுத் தாள்களைப் போன்று போலியான பரீட்சை பெறுபேற்றுத் தாள்களை தயாரித்த நான்கு சந்தேகநபர்கள் கேகாலையில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கேகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பைத் தொடர்ந்து குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)


## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில்
1 3/4 பரப்பு வீடு
விற்பனைக்குண்டு

தொடர்பு (18048)
077 732 6792

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18013)

076 825 7716 (ஆகாஸ்)

## (🍁) Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை (18039)

VISA CONSULTANT
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.
077 038 5584

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

" INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

## விசேட செயலமர்வு

| | |
|---|---|
| 01,02,03 December 2023 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 04,05,06 December 2023 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 07,08,09 December 2023 | ICT, விவசாய விஞ்ஞானம் புவியியல்,கணிதம் |

' காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை' (C-7761)

இடம் : வெலிங்டன் சந்தி,லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்

✆ 077 017 5346

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகர் பகுதியில்
வீடு வாடகைக்கு
தேவை.
(18046)
077 020 2023

## S.D Electric Work - கிளிநொச்சி

வீட்டு வயரிங் தொழிற்சாலைக்குரிய three phase வயரிங் panal bord வேலைகள் மற்றும் வீட்டிற்குரிய பைப் லைன் bathroom pitting வேலைகள் சிறந்த முறையில் பொறியியலாளர்களால் முறைப்படி செய்து தரப்படும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களிலும் எமது சேவை கிடைக்கும். (18042)

076 085 8111

## கடை வாடகை

அச்சுவேலி வடக்கில் சனசமூக
நிலையத்திற்கு அண்மையில்
(வல்லை வீதி) 40' X 40' மொத்த
அளவுடைய மூன்று கடைகள்
முதலாவது - 16' X 40'
இரண்டாவது - 12' X 40'
மூன்றாவது - 12' X 40'
முழுமையாக ஒரு கடையாகவும்
அல்லது தேவைக்கேற்ப மூன்று
பிரிவுகளாக பிரித்துக் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (18034)
077 515 3580
077 307 3840
075 490 3861

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7766)

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
✆ 0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7766)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (18039)

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002


## 31 ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 . 06 . 1946 — மறைவு 31 . 10 . 2023

கடந்த 31.10.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் பாலச்சந்திரன் இராசலட்சுமி

அவர்களது சிவபதப்பேறு குறித்த சபிண்டீகரண கிரியைகள் இன்றையதினம் 30.11.2023 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பூதவராயர் கோவில் ஒழுங்கை,
சிவன் கோவிலடி,
பருத்தித்துறை. (C-7752)

தகவல்:
குடும்பத்தினர்
077 998 9856

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1930.02.15 — ஆண்டவன் அடியில் 2018.11.25

### அமரர் திருமதி இராசம்மா பொன்னுத்துரை

திதி : அபரபக்க திருதியை

அன்பான பேச்சு அழகான சிரிப்பொன்று
அணைத்து மகிழ்வெய்தும் உள்ளம்
அத்தனையும் நாம் இழந்து ஐந்து ஆண்டுகள்
வந்ததுவே அம்மாவே!
கனவில் உனைக்கண்டு களிப்புடனே
கட்டி அணைக்கு முன்னே
சட்டெனவே மறைந்திடுவாய் அம்மாவே!
கண்டது கனவென்று கண்கலங்கி நிற்போம் நாம்
அன்புத் தெய்வமே! அம்மாவே!
அவனியில் நாம் வாழும் வரை
நின் நினைவில் வாழ்ந்திடுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

50, சபாபதி வீதி,
தலையாழி, யாழ்ப்பாணம். (18044)

நின் ஆத்ம சாந்திக்காய் வேண்டும்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org